# சுவிஸ் தமிழ்க் கத்தோலிக்க ஆன்மிகப் பணியகம் நடாத்தும் மறை அறிவுப் போட்டிகள் - 2024

### பிரிவு 3 ( 2016 ஆம் ஆண்டில் பிறந்தவர்கள் வயது 8)

## விவிலிய வினாவிடைப் போட்டி (சரியான விடையைத் தெரிவு செய்தல்)

1. விவிலியத்தில் எத்தனை நூல்கள் உண்டு? **73**
2. கடவுளின் படைப்பில் தலைசிறந்தது எது? **மனிதன்**
3. ஆபிரகாமின் தந்தையின் பெயர் என்ன? **தெராகு**
4. ஆபிரகாம் ஈசாக்கை பலியிட எந்த மலைக்கு அவனை அழைத்துச்சென்றார்? **மோரியா மலை**
5. ஆபிரகாம் இறக்கும் போது அவரின் வயது யாது? **175 வயது**
6. யாக்கோபின் மனைவியர் பெயர் என்ன? **லேயா, ராகேல்**
7. யாக்கோப்பின் பிள்ளைகளுள் கனவிற்கு விளக்கம் கொடுத்தவர் யார்? **யோசேப்பு**
8. மோசேயின் மனைவி பெயர் என்ன? **சிப்போரா**
9. கடவுள் 10 கட்டளைகளை மோசேக்கு வழங்கிய மலை எது? **சீனாய் மலை**
10. மோசே இறந்தபின் இஸ்ராயேல் மக்களை கானான் நாட்டிற்குள் செல்ல வழிகாட்டியவர் யார்? **யோசுவா**
11. யோனா எந்நாட்டு மக்களுக்கு இறைவாக்கு உரைக்க அழைக்கப்பட்டார்? **நினிவே மக்களுக்கு**
12. யோனா எத்தனை நாள் மீனின் வயிற்றுள் இருந்தார்? **3**
13. திருமுழுக்கு யோவானின் உணவு யாது? **வெட்டுக்கிளியும் காட்டுத்தேனும்**
14. புதிய ஏற்பாட்டின் முதலும் இறுதியுமான இறைவாக்கினர் யார்? **திருமுழுக்கு யோவான்**
15. இயேசு பாலை நிலத்தில் எத்தனை நாள் நோன்பிருந்தார்? **40**
16. இயேசு திருமண வீட்டில் எத்தனை கற்சாடிகளில் தண்ணீர் நிரப்பச் சொன்னார்? **6**
17. இயேசு ஐந்து அப்பங்களையும் இரண்டு மீன்களையும் எத்தனை பேருக்கு பகிர்ந்தளித்தார்? **5000 பேருக்கு**
18. இயேசு நற்செய்திப்பணிக்காக எத்தனை திருத்தூதர்களை தெரிந்தெடுத்தார்? **12**
19. இயேசு இறந்து எத்தனையாம் நாள் உயிர்தெழுந்தார்? **மூன்றாம் நாள்**
20. இயேசுவின் அன்புச் சீடர்கள் எத்தனை பேர்? **3**
21. ஆண்டவருக்கான வழியை ஆயத்தப்படுத்துங்கள் என கூறிய இறைவாக்கினர் யார்? **திருமுழுக்கு யோவான்**
22. இயேசுவின் திருமுழுக்கின்போது கேட்ட குரல் ஒலி யாது? **என் அன்பார்ந்த மைந்தன் இவரே இவர் பொருட்டு நான் பூரிப்படைகின்றேன்**
23. திருமுழுக்கு யோவானின் தலையை வெட்டி ஒரு தட்டில் வைத்து இங்கேயே எனக்குக் கொடும் என்று ஏரோது மன்னனிடம் கேட்டது யார்? **ஏரோதியாளின் மகள்**
24. இயேசுவுக்கு மரணதண்டனை தீர்ப்பை வழங்கியவர் யார்? **பிலாத்து**
25. உயிர்த்த இயேசுவை முதன்முதலில் கண்டவர் யார்? **மகதலா மரியா**
26. திருச்சபை அன்னை மரியாவின் பிறந்த தினத்தை எப்போது கொண்டாடுகின்றது? **புரட்டாதி 8**
27. திருச்சபையின் முதலாவது திருத்தந்தை யார்? **திருத்தூதர் பேதுரு**
28. எமது திருத்தந்தையின் பெயர் என்ன? **திருத்தந்தை பிரான்சிஸ்**
29. திருத்தந்தை பிரான்சிஸ் எந்நாட்டைச் சேர்ந்தவர்? **ஆர்ஜென்டினா**
30. திருத்தந்தை பிரான்சிஸ் அவர்களின் இயற்பெயர் என்ன? **ஜோர்ஜ் மாரியோ பேர்கோலியோ**

**பின்வரும் இறைவார்த்தைகள் பரீட்சையின் போது முன்பின்னாக குழப்பி தரப்படும். அவற்றை வரிசைப்படுத்தி எழுதக் கற்றுக் கொள்ளுங்கள்**

“நான் ஆண்டவருக்கெதிராகப் பாவம் செய்து விட்டேன்” 2 சாமு 12:13

## மனனப்போட்டி (மனப்பாடம் செய்து சமர்ப்பிக்க வேண்டும்.)

### இரவுச் செபம்

நமக்கு யாராவது இனிப்பு தந்தால் நன்றி செலுத்துகிறோம். இறைவன் ஒரு நாளைக் கொடுத்தார். நம்முடனே நாள் முழுவதும் இருந்திருக்கிறார். நமக்கு நல்ல உடல் சுகத்தைத் தந்திருக்கிறார். எனவே அவருக்கு நன்றி சொல்வது நமது கடமையாகும். அத்துடன் இரவு என்றாலே சிலருக்கு பயம். எனவே இறைவனிடம் மீண்டும் நம்மை ஒப்படைத்து விட்டால் பயம் இல்லாமல் தூங்கலாமே!

இராச் செபம் சொல்லுவோமா!

அன்புத் தந்தையே இறைவா, இந்த நாள் முழுவதும் நீர் என்னுடன் இருந்தமைக்கு நன்றி, இந்த இரவில் மீண்டும் என்னை உமக்கு ஒப்புக்கொடுக்கின்றேன். உமது தூதர்களை அனுப்பி, என்னை எல்லா தீங்கிலிருந்தும் காப்பீராக. ஆமென்.

## பாடல் போட்டி (மனப்பாடம் செய்து பாட வேண்டும்.)

அப்பா நான் தவறு செய்தேன்
உன் அன்பை உதறிச் சென்றேன்
நான் கெட்டலைந்து ஓடி வந்தேன்
என்னைக் கண்பாரும் உந்தன் பிள்ளை நான் (2)

பாடிவரும் பறவைகளும்
காடுகளில் மிருகங்களும்
உன்னன்பில் மகிழ்ந்திருக்க நான்
உன்னைப் பிரிந்து நொந்தேன் (2)

சுமைகளில் சோர்ந்தோரே
என்னிடத்தில் வாருமென்றீர்
ஆறுதல் வார்த்தை என்னை
உன்னிடத்தில் ஈர்த்ததையா (2)